T-UN-669

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர் 3 | திருவள்ளுவராண்டு 2015 — கார்த்திகை — 29 14—12—1984 | இதழ் 9

கணிப்பொறிச் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா

தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையம் ஆறு கிழமைகள் நடத்திய 'கணிப்பொறி ஒருங்கும் கோபால் மொழியும்' என்ற பயிற்சி வகுப்பின் நிறைவு விழா, 13-11-84 ஆம் நாளன்று நிகழ்ந்தேறியது.

கணிப்பு மைய இணைப் பேராசிரியர் கா.செ.செல்லமுத்து வரவேற்புரை ஆற்றினார். நிறைவு விழா உரையினை ஆற்றிய பேராசிரியர் எசு.கே. ஏகாம்பரம் அவர்கள் மாணாக்கர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார். வளர்தமிழ்ப் புலத் தலைவர் முனைவர் கு. நம்பிஆரூரன் நன்றி கூறினார்.

இச் சான்றிதழ் வகுப்பில் பயின்ற முப்பது மாணவர்களில் 94 விழுக்காட்டினர், முதல் வகுப்பில் வெற்றிபெற்றோர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் முதலாவது நில நடுக்கம்

மொகஞ்சதோரா—ஆரப்பா நாகரிகத்தோடு தொடர்புடைய ஓரிடம் காலிபங்கன். இங்குள்ள தொல்பொருள்களை அகழ்ந்தெடுத்து ஆய்வு செய்த அறிஞர்கள், வீட்டுச் சுவர்கள் பிளவுபட்டிருப்பதையும், சுவர்ச்செங்கற்கள் இடம் மாறி இருப்பதையும் கண்டுள்ளனர். இவை நில நடுக்கத்தினால் ஏற்பட்ட தாக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இக் கருத்து உண்மை என்றால், இன்றைக்கு 4684 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இந் நில நடுக்கமே உலகின் முதலாவது நில நடுக்கமாக இருக்கக்கூடும்.

—அறிவியல் பண்ணை

ஒரு சொல் தாரீர்

'டம்மி' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நான்கு சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னச்சுப்படி,
வெள்ளேடு,
வெள்ளைப்படிவம்,
அச்சிடாப் படிவம்

எல்லாப்பொருளையும் ஆங்கில அகர முதலிவழி ஆய்ந்து சூழ்நிலைக்குப் பொருந்தும் சொல்லாக,
உருக்காட்டும்படி

என்னும் சொல் தந்துள்ளனர். உங்களுக்கு ஏதேனும் சொல் தோன்றுகிறதா?

கோனேரிராயன் காசுகள்

1471 முதல் 1496 வரை தமிழகத்தின் சோழ மண்டலப் பகுதியை ஆட்சி புரிந்த கோனேரிராயன் என்ற மன்னன் வெளியிட்ட காசுகளுக்குக் 'கோனேரிராயன் காசுகள்' என்று பெயர். இவனது இயற்பெயர் 'வயித்தினாத காலிங்கராயன்' என்பதாகும்.



கி.பி.1487—91 வரை இம்மன்னன் விசயநகர மைய அரசுக்கு உடன்படாமல் தனி ஆட்சி செய்த போது இக்காசுகளை வெளியிட்டான்.

—அருங்காட்சியகம்

தலைவிரி கோலம்

''கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நின்புறஞ்சுற்ற''

என்பது மலைபடுகடாம் 44—46

''பீலி விரித்துப் பல மயில் இருந்தாற் போல வழி வந்து அசைந்த வருத்தத்தால் தத்தம் கேசங்களை எடுத்து முடிக்க இல்லாது விரித்திருப்பர். அவர் மலைமேல் வழிபோம் கூத்துப் பெண்டிர், என்று புகழ்தலுற்றான். பெண்சாதிகள் ஊறுபட்டு அழுகை நிகழ்ந்தவிடத்து மயிர் விரித் திருப்பார்கள். அவ்வகை மங்கலம் இல்லாத மயிர் விரியை அவன் நாட்டோடும் புகழ்ந்தமையான், இதுவும், பொருளானந்தம்''

—என்று யாப்பருங்கல விருத்தி உரை (ஒழிபியல் சூத்.96) கூறும். பெண்ணின் தலைவிரி கூந்தல் தீ நிமித்தமாகக் கருதப்பட்டதனைப் புற நானூற்றுப் பாடலும் (260:1—8) கூறும்.

ஆனால், இன்றைய கேரளப் பண்பாட்டிற்கு இக்கருத்து பொருந்தாது. கேரளப் பெண்கள் தலை குளித்துத் தலை முடி காய்வதற்காக விரித்துப் போட்டபடி சிறிதாக முடிந்துகொண்டு கல்லூரி, அலுவலகம் முதலியன செல்வதைப் பார்க்கலாம். இது ஒரு பாதி தலைவிரி கோலம். இது பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டில் உள்ளது போன்று இன்றைய கேரளப் பண்பாட்டில் இதற்கு அமங்கலப் பொருள் இல்லை. 'அரைகுறை' யாகப் பெண்கள் தலையை விரித்துச் செல்லும் பழக்கம் பிற்காலத்தில் தோன்றியதாக இருக்கலாம். கேரளத்துக்காரரான இரவிவர்மா அவர்களும் தாம் வரைந்த திருமகள், கலைமகள் முதலியவர்களையும் கேரளப் பெண்களின் சாயலில் சற்றே தலைவிரித்த கோலத்தில் அமைத்திருப்பது நோக்கத்தக்கது. இது தமிழ்ப் பண்பாட்டிலே அமங்கல நினைவுகளை எழுப்பக்கூடும். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்கூடத் தம் சொற்பொழிவுகளில் 'இரவிவர்மா படத்தில் கலைமகளும், திருமகளும் தலைவிரித்தபடி உள்ளார்களே; இது அமங்கலமல்லவா' என்ற வினாவை எழுப்பி இதற்கு ஏதேனும் நுட்பம் உண்டா எனக் கேட்பதுண்டு. பண்பாட்டுக் கூறுகளின் குறி யீட்டுப் பொருள் மாறுவதற்கும் அவை வேறு வேறு சமூகங்களில் வேறு வேறு குறியீடாக அமைவதற்கும் இஃது ஓர் எடுத்துக்காட்டு.

—கி.நாச்சிமுத்து

இணைப்பேராசிரியர், கேரளப் பல்கலைக் கழகம்

சுமத்திராவில் தமிழ்

கி.பி.1088—இல் சுமத்திராதீவில், வணிகக் குழுவினரின் கொடை பற்றிய செய்தி கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. அச்செய்தி தமிழில் உள்ளது. கி.பி.1088—இல் சுமத்திராவில் பொது ஆவணங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டன.

(கே.ஏ. நீலகண்ட சாத்திரி,
தென்னிந்தியாவும் தென்கிழக்கு ஆசியாவும்—பக்கம்: 237.)

—செ.இரெ.செயச்சந்திரன்

பொடி போடும் பழக்கம்

'இராபர்ட்டு பாக்கு' (Palk) என்பார் தஞ்சையினின்று 18-4-1754—இல் சென்னை தூய சார்சு கோட்டை (Fort St. George) ஆளுநர் மேன்மை தங்கிய தாமசு சாண்டர்சு (Thomas Saunders) அவர் களுக்கு எழுதிய கடிதத்தில், திரு குக்கு (Cook) அவர்கள் பரிந்துரைத்த வண்ணம் (கடலூர்) தூய தாவீது (St. David) கோட்டையினின்று மூக்குப்பொடித் தங்கச் சிமிழ் (Gold Snuff Box) ஒன்று 50 வராகனுக்கு வாங்கியதாகவும், அதனைப் பிற பரிசுப் பொருள் களுடன் தஞ்சை மராட்டிய மன்னருக்கு அளித்த தாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இக்கால வட்டத்தில் தஞ்சையில் அரசு வீற்றி ருந்தவர் பிரதாபசிங்கு ஆவர். பொடிச்சிமிழ் பரிசு ஆகக் கொடுக்கப் பெற்றது என்பதால் அந்நாளிலேயே மன்னரும் பிறரும் ஒரோவழி பொடி போடும் பழக்கம் உடையராய் இருந்தமை பெறப்படும்.

-Records of Fort.St.George - Diary and Consultation Book, Military Department, 1754, page 92.

—கே.எம்.வேங்கடராமையா, சுவடிப்புலம்

திருவள்ளுவப் பயன்

திருக்குறளுக்குப் பல பெயர்களுடன் 'திருவள்ளுவப் பயன்' என்ற பெயரை இளம்பூரணர் உரையும், தக்கயாகப் பரணி உரையும் மிகுதியாகக் எடுத்தாள்கின்றன.

''அறம் பற்றி வருதல் திருவள்ளுவப்பயன் முதலிய சான்றோர் செய்யுட்களுள் அறப்பகுதியிற் கூறப்பட்டன''

(தொல். பொருள்.152—இளம்.)

''திருவள்ளுவப்பயனில் வான்சிறப்பென்னும் அதிகாரத்துள்ளுங் கண்டுகொள்க''
(தக்கயாகப் பரணி— கடவுள் வாழ்த்து 9—உரை.)

—சா.கிருட்டிணமூர்த்தி, ஓலைச்சுவடித்துறை

கன்னியாகுமரி—கழிக்குடி
அழகியபாண்டிபுரம்—அதியனூர்

திருவிதாங்கூர் அகழாய்வுத் தொட ரின் (பழம் கல்வெட்டு மற்றும் செப்பேடு, ஆவணங்கள்) முதலாம் தொகுதியின் 163—ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பின்படி கன்னியாகுமரியின் பழைய பெயர் 'கழிக்குடி' என்பதாகும்.

அஃதேபோல் இந்நூலின் மூன்றாம் தொகுதியின் 57—ஆம் பக்கத்தில் அழகிய பாண்டிபுரத்தின் பழைய பெயர் 'அதிய னூர்' என்றும், 'அதியனூர் என்பது வள்ளல் அதியனின் ஊராகும்' என்றும் கூறப்பட் டுள்ளன.

(சான்று: மலையாளப் பேரகராதி தொகுதி 1—பக்கம் 228; தொகுதி 3—பக்கம் 539)

—வே.சா.அருள்ராசு

''சொற்பொழிவு ஆற்றுப்படை''

சொற்பொழிவாற்றும் முறையை விளக்கும் நூல் ஒன்று ''சொற்பொழிவாற்றுப்படை'' என்னும் பெயரில் 60 ஆண்டுகட்கு முன் வெளிவந்துள்ளது.

திருநெல்வேலி எஃச்.பால்வண்ண முதலியார் அதனை எழுதியுள்ளார். எம்.எஃச்.பூர்ணலிங்கம் பிள்ளை அதற்கொரு ஆங்கில முன்னுரை வழங்கி யுள்ளார்.

கையடக்க அளவுள்ள இச்சின்னூல் 56 பக்கங் களைக் கொண்டது. பொதுவியல், பேசப்பயிலு முறையியல், பேச்சு முறை யியல், பேசுவோனியல், பேசும் பொருளியல், அவையோர் நிலையியல், பேச்சின் பயனியல், பேசு நேரவியல், பிறன்கோண் மறுப்பியல், அவைத்தலைவரியல், முடிபியல் எனும் பதினொரு இயல்களைக் கொண்டுள்ளது இந்நூல்.

செய்யுள் நூலுக்குரிய 'ஆற்றுப்படை' என்னும் பெயரையும், 'இயல்' என்னும் பகுப்பையும் பெற்றுள்ளதாயினும் காப்பு, இறை வணக்கம் ஆகிய இரண்டு செய்யுள்களை அன்றி நூல் உரைநடை யிலேயே அமைந்துள்ளது.

''இந்நூன் முழுதுந் தமிழ் மொழியிலேயே எழுதப்பட வேண்டுமென்னு மெண்ணம் என்பாலுந்த ஒருவாறு அவ்வாறே எழுதி முடித்தேன்'' என்று ஆசிரியர் எழுதியுள்ளதற்கேற்ப, 'உதிரம்' என்னும் ஒரு சொல்லன்றித் தூய தமிழில் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூல் அளவால் சின்னூல் ஆயினும் சொற்பொழிவு முறை பற்றித் தமிழில் தோன்றிய முன் நூலாகும்.

—கோவை.இளஞ்சேரன்

அருங்காட்சியகம் பற்றிய சில சொற்கள்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகம், வரலாறு, பண்பாடு, கலை ஆகியவற்றோடு தொடர்புடைய பல்வேறு அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டதாகும். இவ் வருங்காட்சியகம் பற்றிய பார்வையாளர்கள் சிலரது கருத்துக்களைக் கீழே தந்துள்ளோம்.

காட்சியைக் கண்டேன் — அதிசயக் காட்சியைக் கண்டேன். மாட்சிமையான பழந்தமிழ்ப் பண்பாட்டின் ஆட்சியில் ஆகிய ஆச்சரியமான காட்சியைக் கண்டேன்.

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

அருங்காட்சியகம் பெயருக்கேற்ற வண்ணம் அரிய பொருள்களின் கருவூலமாய்த் திகழ்கிறது. வரலாற்று அடிப்படையிலும், இலக்கிய அடிப்படையிலும், ஏட்டுச் சுவடிகள், நாணயங்கள், கட்டிட அமைப்புகள், சிலைகள் ஆகியவற்றைத் திரட்டி வைத்திருப்பது பாராட்டின்பாலது. இஃது ஓர் ஆராய்ச்சிக் களஞ்சியம்.

—டாக்டர் மெ.சுந்தரம், சென்னை—28

இங்குள்ள திரட்டு மிக அறிவு புகட்டக் கூடியதாக உள்ளது. குறுகிய காலத்தில் இதை அமைத்த எல் லோரையும் பாராட்டுகின்றேன். இதை இன்னும் விரிவுபடுத்துவதோடு, ஊர்தோறும் அருங்காட்சியகம் தோன்ற வித்திடுக. என் பாராட்டும் வாழ்த்துகளும்.

—திரு கி.நாச்சிமுத்து, கேரளப் பல்கலைக் கழகம்

நாட்டுக் கலை விழா நூற்காட்சி

தமிழ்ப் பல்கலைக் கழகம்

இவ்வாண்டுப் பொங்கல் திருவிழாவை நாட்டுக் கலை விழாவாகக் கொண்டாட உள்ளது.

திருவள்ளுவர் ஆண்டு 2015—தை 2—ஆம் நாள் 1985 சனவரி 15 முதல் 20 வரை, தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் (தஞ்சை—வல்லம் சாலை) விழா நிகழும்.

தெருக்கூத்து,	தோற்பாவை நாடகம்,
கதகளி,	தேவராட்டம், வில்லுப்பாட்டு,
கரகம், காவடி,	பொய்க்கால் குதிரை,
உறுமி மேளம்,	மஞ்சுவிரட்டு, கபடி,
சிலம்பாட்டம்	

முதலிய கலை நிகழ்ச்சிகளுடன் இலக்கிய நிகழ்ச்சிகளும் அமையும்.

கலை விழாவில்

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பதிப்பகங்கள்

பங்குபெறும்

தமிழ் நூற் காட்சி

அமையும்.

கலைநிகழ்ச்சிகளைக் கண்டு களிப்படைக!

பலவகை நூல்களைப் பார்வையிடுக!

புதன்வட்ட நிகழ்ச்சிகள்

நாள்	ஆய்வாளர்	ஆய்வுப்பொருள்
7-11-84	திரு சா.கிருட்டிண மூர்த்தி ஓலைச்சுவடித்துறை	தொல்காப்பிய மூன்று அதிகாரங் களின் முதல் இயல்கள்
14-11-84	முனைவர் கி.அரங்கன் மொழியியல் துறை	மொழியியலும், மொழிப் புதுமை களும்
21-11-84	முனைவர் ந.அறிவழகன் இலக்கியத்துறை	செயகாந்தன் நாவல்களில் மரபு
5-12-84	திரு க.இரவிசங்கர் மொழியியல் துறை	அரிசனப் பேச்சு வழக்கில் காணப்படும் தொடரொலி அமைப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

[illegible]

பதிவெண் 15033/82

இ.அ.அ. மட்டும்.

328) (1/திச 84) 84)
திருமதி புலவர் திலகம்
3/1709, பிச்சாண்டி முதலி சந்து
மானோசியப்பா வீதி
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001
தமிழ்நாடு - இந்தியா.

உலகச்சமய மாநாட்டில் பங்கேற்ற தமிழர்

அண்மையில் தென் கொரியாவின் தலைநகர் சியோலில் நடைபெற்ற உலகச்சமய மாநாட்டில் அழைப்பின்பேரில் சென்னையைச் சார்ந்த திரு கி. இலட்சுமணன் பங்கேற்றார்.

பன்னாட்டு அறிஞர் பெருமக்களும், சமய வல்லுநர்களும் கூடியிருந்த அவ்வுலக அரங்கில், தமிழ் மொழி பற்றியும், தமிழ் நாட்டுக்கே சிறப்பாக உரிய சைவ சித்தாந்தம் பற்றியும் விதந்து குறிப்பிடுவதாக அவர்தம் உரை அமைந்தது.

மூளைக்கட்டியை அகற்றும் புதிய முறை

மூளையில் ஏற்படும் கட்டிகளில், அகற்றிய பின்னரும் தோன்றும் வகை மிகவும் தீங்கு விளைவிப்பதாகும். ஆஃச்திரிய நாட்டு, நரம்பியல் மருத்துவப் பேராசிரியர் பிரிட்ரிக் கெப்பனர் என்பார், இதனைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார். இரு நிலைகளில் செய்யப்படும் இவர்தம் பண்டுவ முறையினால் எண்பது நோயாளிகள் காக்கப்பட்டுள்ளனர்.

முதலில், கட்டி அகற்றப்பட்ட பகுதியின் காயம் லேசர் கதிர்களால் ஒருசேர மூடப்படுகிறது. பின்னர், அவ்விடத்தைச் சுற்றி, பொடிக்கப்பட்ட உலோகத்தூள், ஒருவகை நார்ப்பசையின் உதவியால் ஒட்டிப் பூசப்படுகிறது. பத்து நாள்களுக்குப் பின் நோயாளி மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்.

பிறகு ஒவ்வொரு திங்களும், இரண்டாம் நிலைப் பண்டுவம் செய்யப்படுகிறது. உலோகத்தூள் பூசப்பட்ட பகுதி மாறுபட்ட காந்த மண்டலத்துள் ஆட்படுத்தப்பட்டு, 55 முதல் 60 சென்டிகிரேடு வெப்பமும் அப்பகுதிக்கு ஊட்டப்படுகிறது. இதனால், வளர முற்படும் தீய திசுக்கள் உடனே அழிக்கப்படுகின்றன.

இம்முறை எளிமையாகவும், தீங்கற்றதாகவும் இருக்கிறது. அத்துடன் வேறு சார்விளைவுகளை (*Side-effects*) ஏற்படுத்துவதில்லை.

—க. நாகமணி, பதிப்புத்துறை

கி.பி. 1754 – இல் மாயவரம்

இற்றை ஞான்று 'மயிலாடுதுறை' என்று குறிக்கப்பெறும் ஊர், முன்னர்க் கூறப்பெற்றமை போலவே 'மாயவரம்' என்று 18– ஆம் நூற்றாண்டில் வழங்கப்பெற்றமை சென்னை—தூய சார்சு கோட்டை 1754க்குரிய ஆவணங்களிற் காணலாம்.

- Records of Fort. St. George— Country Correspondence 1754, page 16.

—கே. எம். வேங்கடராமையா
சுவடிப்புலம்

நூல்களைப் பெறுக!
பரிசையும் பெறுக!

தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புகளை
நேரில் வாங்குவோர்க்குப் பரிசு

உரு. 200/—க்கு மேல்	ஒரு பேனா
உரு. 400/—க்கு மேல்	ஒரு பிளாஃச்டிக் கோப்பு
உரு. 600/—க்கு மேல்	ஒரு பிளாஃச்டிக் கைப்பை
அனைத்து நூல்களையும்	ஒரு கையடக்க வானொலிப் பெட்டி

இப்பரிசளிப்பு
1 – 12 – '84 முதல் 15 – 1 – '85 வரை

பரிசைப் பெற, பதிப்புத்துறை அழைக்கிறது.

துணை இயக்குநர்
பதிப்புத்துறை,

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் – 613 001.